சமூக விஞ்ஞான கற்கை வட்டம்



செய்திமடல் - 94 | 21-03-2013

14-03-2013 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

## தலைப்பு : தமிழகத்தின் மாணவர் போராட்டங்களும் ஜெனீவாவில் திண்டாட்டங்களும்

**மாணவர் போராட்டங்கள்**

லயோலா கல்லூரி மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றினைத் தொடங்கியதைத் தொடர்ந்து ஈழத்தமிழருக்கான மாணவர் போராட்ட அலை ஒன்று தமிழகத்தில் எழுந்துள்ளது. Channel - 4 வெளியிட்ட பாலச்சந்திரன் கொல்லப்படுவதற்கு முன்னும் பின்னுமான ஒளிப்படங்கள், ஜெனீவாவில் கொண்டுவரப்பட்ட முன்மொழிவு போன்ற சம்பவங்கள் இப்போராட்ட அலை ஏற்படுவதற்கான உடனடிக் காரணங்களாயின.

அடிப்படையில் மாணவரது போராட்டம், ஜெனீவாவில் அமெரிக்கா கொண்டுவந்துள்ள முன்மொழிவு ஒன்றுபட்ட இலங்கையை வலியுறுத்துகிறது என்பதாலும், வெளிநாட்டுத் தலையீட்டுடனான விசாரணை ஒன்றினைக்கோரவில்லை என்பதாலும் அதனை நிராகரிக்கிறது. அமெரிக்காவின் முன்மொழிவுக்கு மாற்றாக, இந்தியா ஐ. நாவில் மாற்று முன்மொழிவொன்றினைக் கொண்டுவர வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கிறது. தமிழீழப் பிரிவினையை முதன்மையான கோரிக்கையாக முன்வைக்கிறது.

எழுச்சியுற்றிருக்கும் மாணவர் போராட்ட அலையோடு அலையாக வெவ்வேறு அரசியல் முகாம்களில் உள்ளவர்களும் இணைந்துகொண்டுள்ளார்கள். குறிப்பாக TESO அமைப்பு, அமெரிக்காவின் முன்மொழிவினை ஆதரிக்கும் நிலைப்பாட்டோடு ஆர்ப்பாட்டங்களைச் செய்து வருகிறது.

மாணவர் எழுச்சியொன்று ஆரோக்கியமானதெனினும், வெறும் உணர்ச்சிகரமான எழுச்சியாக மட்டுமே அதனை வழிநடத்திச்செல்வது சூழ்ச்சிகரமான அரசியல் அக்கறைகளோடு அப்போராட்டங்களைப் அல்வேறு சக்திகளும் பயன்படுத்திக்கொள்வதற்கு வழிசெய்துவிடும்.

**ஜெனீவா தீர்மானம்**

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்த்து மக்களிடையே நல்லெண்ணத்தையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்தவோ தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுக்கவோ வேண்டி அமெரிக்கா ஜெனீவாத் தீர்மானத்திற்குப் பின்னிருந்து முழு மூச்சாகச் செயற்படவில்லை. நோர்வீஜிய அனுசரணை பெற்ற அமைதிப் பேச்சுக்கட்குப் பின்னாலிருந்து இலங்கை மீது தனது ஆதிக்கத்தை வலுப்படுத்தத் தவறிய அமெரிக்கா இப்போது ஐ.நா. மூலம் தனது தலையீட்டைப் புதுப்பித்துள்ளது.

> பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவும், குற்றம் புரிந்தவர்களுக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்கவும் அனைத்து மக்களும் ஐக்கியப்பட்டு செயற்பட வேண்டியது அவசியம். இதனை அடக்கு முறையாளர்களினதும், ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலின் கீழும் செய்ய முடியாது.

நாடுகளில் தலையிடவும் ஊடுருவவும் உள்நாட்டு முரண்பாடுகளைப் பயன்படுத்துவது அமெரிக்காவின் வழமையாகி விட்டது. கேந்திர முக்கியத்துவம் மிக்க இலங்கையைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நோக்கிலேயே கடந்த ஆண்டு அது ஜெனிவாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியது. ஆதன் தொடர்ச்சியாகவே இம்முறை கொண்டுவரப்படும் தீர்மானத்தை நோக்க வேண்டும்.

உள்நாட்டில் அரசாங்கத்தின் செல்வாக்கின்மையையும் மனிதவுரிமைக் குற்றங்களையும் பயன்படுத்தி அமெரிக்கா இலங்கை அரசாங்கத்தைத் தனக்குப் பணிய வைக்கலாம், அல்லது நாட்டில் ஒரு ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவரலாம். இவற்றில் எதுவுமே மக்களுக்கு நன்மையான மாற்றமல்ல. இத்தீர்மானம் தமிழ் மக்களுக்கு எதையுமே தரப் போவதில்லை.

மிகுதி அடுத்த பக்கம்

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

**ஹூகோ சாவேஸ்: வாழ்வும் மரணமும்**
கஜேந்திரன் | 21-03-2013

**தேசம்-இனம்-தேசிய இனம்**
சி. சிவசேகரம் | 28-03-2013



ஹூகோ சாவேஸ்

ஹூகோ ரஃபயெல் சாவெஸ் ஃபிரியாஸ் (*Hugo Rafael Chavez Frias*, ஜூலை 28, 1954 - மார்ச் 5, 2013) வெனிசுவேலாவின் 53வது அரசுத் தலைவர் ஆவார்.

தென் அமெரிக்க முதற்குடிமக்கள் பின்புலம் உள்ள முதல் சனாதிபதி இவர் ஆவார். இவர் ஒரு இடது சாரித் தலைவர் ஆவார். இவரது தத்துவ பின்புலத்தில், தலைமையில் வெனிஸ்வேலாவில் அமைந்த புரட்சியைப் பொலிவரியன் புரட்சி என்று குறிப்பிடுவர். பொலிவேரியப் புரட்சியின் தலைவராக இவர் மக்களாட்சி சோசியலிசம் இலத்தீன் அமெரிக்க நாடுகளின் ஒருங்கிணைப்பு மற்றும் வல்லதிகார எதிர்ப்பு போன்ற கோட்பாடுகளின் தனது சொந்த பார்வையை பரப்பி வந்தவர். இவர் தனது சமகால முதலாளித்துவத்தையும் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் வெளியுறவுக் கொள்கையையும் கடுமையாக எதிர்த்து வந்தவர்.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 6:00 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
121 , ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.
0772260165
0752151580

FB group : facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் : circle.thulaa.net

வலைப்பதிவு : circlelk.blogspot.com

## தமிழகத்தின் மாணவர் போராட்டங்களும் ஜெனீவாவில் திண்டாட்டங்களும்

முன்பக்கத் தொடர்ச்சி..

அமெரிக்க ஏகாதிபத்தியமும், ஐ.நா சபையும் நாடுகளின் இறைமையில் தலையிடுவது புதிதல்ல. அதனால் அத்தலையீடுகளை ஏற்று அங்கீகரிக்க வேண்டியதில்லை. அத்தலையீடுகளைத் தவிர்க்கவும் எதிர்க்கவும் வேண்டுமாயின் சொந்த நாட்டு மக்களுக்கு அரசாங்கங்கள் நேர்மையாகப் பதில் சொல்லக் கடப்பாடுடையனவாக இருக்க வேண்டும். ஏகாதிபத்திய அரவணைப்பாளர்களாக இருக்கும் நாடுகளின் தலைவர்கள் தமது அடக்குமுறை ஆட்சிக்கு சாதகமாக ஏகாதிபத்தியங்கள் இருக்கும் போது அவற்றை புகழ்வதையும், அடக்குமுறை ஆட்சிக்கு மாறாக அல்லது எதிராக ஏகாதிபத்தியங்கள் செயற்படும் போது அவற்றை எதிர்த்து பெரிய ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களாகவும் தேசப் பற்றாளர்களாகவும் காட்டிக் கொள்வதையும் மக்கள் அறிவார்கள்.

இத்தீர்மானத்தை இலங்கை மீதான இறைமை மீறல் என ஒற்றைப் பரிமாண நிலை நின்று தட்டிக் கழிப்பது வேடிக்கையானதும் ஆபத்தானதுமாகும். இலங்கையின் இறைமை என்பது நாட்டின் சிங்கள தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ்த் தேசிய இனங்களினதும் ஏனைய சிறுபான்மை சமூகங்களினதும் ஒட்டுமொத்த இறைமையையே குறிப்பதாகும். அத்தகைய இறைமை மீது அமெரிக்க மேற்குலக ஏகாதிபத்திய சக்திகளின் உள்நோக்கப் பின்புலத்துடன் ஐ.நா. மூலமான தலையீடு தற்செயலானதல்ல.

கடந்த ஆண்டுத் தீர்மானம் மூலம் இலங்கை அரசு மிகவும் செல்லமாகப் பயங்காட்டப்பட்டுள்ளது எனலாம். இத்தீர்மானங்கள்; தமிழ்மக்களுக்கு நன்மையானது என்று சொல்பவர்களும்;, இது இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான ஏகாதிபத்திய-புலிகள் கூட்டுச் சதியென்று பரப்புரை செய்யும் சிங்கள பௌத்த இனவாதிகளும் இருக்கின்றனர். இந்த நிகழ்வுகள் இலங்கையின் சிங்கள ஆதரவு நிலையை மேலும் பலப் படுத்தியுள்ளது. அத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தேசப்பற்றாளனாகவும் ஏகாதிபத்திய எதிர்ப்பாளனாகவும் தொடர்ந்து வலம் வருவதற்கான சாத்தியப் பாடுகளை அதிகரிக்கச் செய்துள்ளது.


உள்நாட்டு அடக்குமுறையாளர்களுக்கு ஐ.நா. சபையின் சில செயற்பாடுகள் அச்சுறுத்தலாக இருப்பதுண்டு. அதே போன்று உலகில் பெரிய சக்திகள் சிறிய நாடுகளை அச்சுறுத்தி அடிபணிய வைக்க ஐ.நா. சபையின் சில செயற் பாடுகளை திட்டமிட்டு முடுக்கி விடுவதுமிண்டு. ஐ.நா. சபையின் சில செயற்பாட்டுத் தளங்களுக்கு அப்பால் மேலாதிக்க சக்திகள் தமது ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்கும் அவற்றுக்கு அடிபணியாத நாடுகளை அடிபணிய வைக்கவும் செயற்பட்டு ஆக்கிரமிப்புகளையும் செய்துள்ளன. ஈராக் முதல் லிபியா வரை இவற்றை அவதானிக்க முடிந்துள்ளது. இந்த மேலாதிக்க சக்திகள் ஐ.நா. சபையின் செயற்பாடுகளினால் கேள்விக்குட்படுத்தப்பட முடியாதவையாக இருக்கின்றன என்பதும் தெரிந்ததே.

ஐ.நா. சபை என்பது நவகொலனித்துவ ஏகாதிபத்திய சர்வதேச நிறுவனம் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்கமுடியாது. ஆனால் அடக்குமுறை அரசுகளின் எதேச்சாதிகாரப் போக்கிற்கு எதிராக ஐ.நா. சபையின் நடவடிக்கை மூலம் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்ற போக்கு ஒன்று இருப்பதைக் காணமுடியும். மக்கள் விரோத அடக்குமுறை அரசுகளுக்கு எதிரான சர்வதேச ரீதியான நடவடிக்கைகளில் ஐ.நா. சபையூடாக மட்டுப்படுத்தப்பட்ட தாக்கம் கொண்ட நடவடிக்கைகளை எடுக்க முடியும். இந்த நடவடிக்கைகளை ஏகாதிபத்தியம் பயன்படுத்தும் ஆபத்திருக்கின்ற போதும் இந் நடவடிக்கைகளில் அடக்குமுறை அரசுகளின் கொடுமைகளைக் கேள்விக்குட்படுத்தச் சந்தர்ப்பம் இருப்பதுடன், அடக்குமுறை அரசுகள் மீது அழுத்தங்கள் ஏற்படவும் வாய்ப்புகள் உண்டு.

பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கேட்பதை ஏகாதிபத்தியச் சதியாகவும், நீதி மறுப்பதை ஏகாதிபத்திய எதிர்ப்பாகவும் கொள்வது இலங்கை ஆளும் வர்க்கங்களினதும் அடக்குமுறை அரசினதும் நிலைப்பாடாகும். அடக்கப்படும் ஒடுக்கப்படும் தொழிலாளர்கள், விவசாயிகள், தேசிய இனங்களது நிலைப்பாடானது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். என்பதாகும் குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதாகவே இருக்க முடியும். இந்த நிலைப்பாட்டை முன்நகர்த்த இலங்கை மக்களின் ஐக்கியமும் ஒருமைப்பாடும் அவசியம்.

பாதிக்கப்பட்டவர்கள் உள்நாட்டுச் சட்டங்களின் கீழும் சர்வதேசச் சட்டங்களின் கீழும் நடவடிக்கைகளை எடுக்க உரிமை உடையவர்கள். இன்றைய அரசுகள் ஐ.நா.வின் சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டவைகளாகவே இருக்கின்றன. அவற்றின் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு அரசுகள் முகம் கொடுக்க வேண்டியுள்ளன. ஆனால் இவை மிகவும் வரையறுக்கப்பட்டவை என்பதனை மக்கள் விளங்கிக் கொள்வது அவசியம்.

எனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவும், குற்றம் புரிந்தவர்களுக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்கவும் அனைத்து மக்களும் ஐக்கியப்பட்டு செயற்பட வேண்டியது அவசியம். இதனை அடக்கு முறையாளர்களினதும், ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலின் கீழும் செய்ய முடியாது. மக்களுக்கான நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்க வேண்டும். அனைத்து அடக்கப்பட்ட மக்களினதும் ஐக்கியப்பட்ட போராட்டத்தை தவிர இதற்கு வேறு வழிகள் எதுவுமில்லை.




### ஹியூகோ சாவேஸ் : வாழ்வும் இறப்பும்
### (இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு)

1. கெடுபிடிப்போரின் பின்னர் இலத்தீன் அமெரிக்கா.
2. நவதாளாரளவாதின் பிடியில் வெனசுவேலாவின் சாவேஸின் இராணுவச் சதியும்.
3. சாவேஸின் வருகையும் வெகுசனங்கள் அரசியல்மயமாதலும்.
4. பொலிவாரியப் புரட்சியும் இலத்தீன் அமெரிக்காவின் திசைவழியும்.
5. பெற்றோலிய அரசியலும் சாவேஸின் பொருளாதாரக் கொள்கையும்.
6. சாவேஸ் விட்டுச் சென்ற வழித் தடமும் இலத்தீன் அமெரிக்காவின் எதிர்காலமும்.

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
cc BY NC SA